உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் யிகூ	சுபானு—ஆவணி 1943—ஆகஸ்டு	மலர் ரு

பொழிற்ரெண்டர் குறிப்புக்கள்

ஆனந்தரங்கப்பிள்ளை

நூன் மதிப்பு

பதினெட்டாவது நூற்ருண்டில் ஐரோப்பிய வணிகர் குழுக்கள் தென்ஞட்டில் வாணிகத்தோடு நில்லாது அரசுரிமைகளையும் கைப்பற்றத் தொடங்கின. ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரர்களும் உள்நாட்டு அரசர்களோடு மாறிமாறி நட்பும் பகையுங் கொண்டு தங்கள் ஆட்சியை நிலைநாட்டுவதிலும், பரப்புவதிலும் முனைந்துவந்தனர். பிரெஞ்சுக்காரர்களில் தலைசிறந்து விளங்கியவர் 'தூப்ளே' துரைமகனர். இவருடைய அமைச்சர் என்று கூறத்தக்க நிலையில் நின்றவர் ஆயர்குலத் தலைவர் ஆகிய ஆனந்த ரங்கப்பிள்ளை யென்பார்.

இவர் கல்வியாலும், வாணிபம் வேளாண்மை முதலியவற்ருல் பெருகிய செல்வத்தாலும், அரசாட்சியில் பெரும்பேறு பெற்று அரசியல் துறைபலவற்றுள்ளும் தலை சிறத்தோங்கிய செல்வாக்காலும் சிறந்து விளங்கிஞர். இவற்றையெல்லாம் விட இவரை என்றும் நாம் நினைக்கும்படிச் செய்வது இவர் எழுதிய சிறந்த நாட்குறிப்புக்களாகும். தென்ஞட்டின் பதினெட்டாவது நூற்ருண்டின் வரலாற்றுண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கு இந்நாட் குறிப்புக்கள் சிறந்த கருவியாகத் திகழ்கின்றன. ஆங்கிலம், பிரஞ்சு முதலிய மொழிகளில் இவை மொழி பெயர்க்கப்பட்டிருந்தும், அவர் எழுதிய மூலமொழியாகிய தமிழில் இது காறும் அவை வெளிவராமல் இருப்பது தமிழர்களுக்குப் பெருங் குறையாகும்.

பதினேழு பதினெட்டாம் நூற்ருண்டாகிய இருட்காலங்களில் தோன்றி, செயற்கரிய செய்த பெரியார்களை நாளடைவில் நாம் மறந்து வருகின்ற குறையை நீக்கி, அவ்வரலாறுகளில் நம்

உள்ளம் செல்லுமாறு, இவரது வரலாற்றை மிகவும் சுருக்கமாகவும் அழகாகவும் ஒருவர் வாழ்க்கையிலுள்ள எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கி எழுதியிருப்பது பாராட்டத்தக்கதாகும். இந்நூலிலுள்ள ஒவ்வொரு பகுதியும் தனித்தனி நூலாக வெளியிடக்கூடிய பொருளுடையன.

இந்நூலாசிரியர், தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு எனும் மும்மொழிகளிற் புலமையும் பிரஞ்சு அரசியலில் உயர் பதவியும் பெற்றுள்ள திருவாளர் **ரா. தேசிகம்பிள்ளை** அவர்கள் B.A., B.L., இது தொடர்பாகப் பல செய்திகளும் தெரிவிக்கக்கூடிய நூல்களை எழுதித் தமிழிலக்கியத்தின் வாழ்க்கை வரலாற்றுப் பகுதியை வளம்படுத்துவாரென எண்ணுகின்றேம்.

சங்க ஆண்டுவிழா.

(முற்றொடர்ச்சி பக்கம் 70)

ஞாயிறு மாலை நான்கு மணிக்கு, ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சையபிள்ளையவர்கள் சீரிய தலைமையில் விழா தொடர்ந்து நிகழ்ந்தது. நிகழ்ந்த விரிவுரைகளின் சுருக்கம் பின்வருமாறு.

தலைக்கண் வைத்தகண்

வித்துவான் திரு. A. R. முத்தையன் அவர்கள்

ஞாயிறும் தமிழுமே இருளகற்றி ஒளி தருவனவென, ஓங்கலிடை.........எனும் வெண்பாவால் விளக்கி, ஒளியே மகிழ்விற்கேதுவெனக் காட்டி, இருபேர் ஒளியிடையிருந்த மன்றினரையகக்கண் கொண்டு வெளியுலகைக் காணச் செய்து, யாண்டும் வறுமை, பசி, பிணி, அறியாமை முதலிய நிலவுதலை யுணர்த்தி, இதற்கேது யாதெனத் தெளிவு படுத்தினர். மாநிலங்காவலனுவான்.........என்ற செய்யுளை விளக்கி அரசிலக்கணம் கூறிச் சங்கநூற் சிலப்பதிகாரச் சான்றுகளால் பழங்கால அரசியலைப் புலப்படுத்தினர். மக்கள் இனிதே வாழ, மொழி, கலை வளர, நாட்டில் அமைதி நிலவ வேண்டுமெனவும் அது மன்னனால் அமைவதாதலின் அரசே தலைக்கண் வைத்தகண்ணுவான் எனவும் மொழிந்து,

கண்ணெனப்படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினிற் சுழலவோடும் வெய்யவ னென்னும்பேர
எண்ணினுள் தலைக்கண்வைத்த கண்ணது இல்லையாயின்
மண்ணினுக்கு இருளைநீக்கும் வகைபிறிதில்லை மாதோ

என்ற செய்யுளால் பெயர்விளக்கமுங்காட்டித் தன் அரிய உரையை நிறைவித்தார்.

சங்கத்தமிழ்

திரு. இளவழகனார் அவர்கள்

பேசுமிடம் தமிழ்ச்சங்கமாதலின் அதன் பெயரையே மாற்றிச் சங்கத் தமிழ் எனப்பொருள் குறித்ததாகவும், கரந்தையெனில் மீட்டல் எனப்பொருள் உளதாதலின் தமிழ் இழந்ததை மீட்டற்கெழுந்ததே இச்சங்கமெனவும் மொழிந்து, சங்கத் தமிழுக்கும் பிற்காலத் தமிழுக்கும் உள்ள வேற்றுமைகளை எடுத்துக்காட்டி சங்கத்தமிழின் தெளிவை, பொருள் வளத்தை, திட்பநுட்பங்களை, இயற்கையழகை விளக்கி, அக்கால மக்களின் செவ்விய வாழ்க்கை முறையினைக்காட்டும் ஆடி, சங்க இலக்கியங்களே எனவும் தெளிதமிழ் வழங்கி யாவர் உள்ளத்தையுங் கொள்ளை கொண்டார்.

திருக்குறளும் பரிமேலழகரும்.

திரு. இராமசாமிக்கவுண்டர் அவர்கள், M.A., L.T.,

திருக்குறள் தமிழர்களின் தனிமறை யெனவும் பலர்க்கும் ஒப்பமுடிந்துள்ளமையின் பொதுமறை யெனவும் கூறுப. பழந் தமிழர்களின் பண்புகளும் பழக்க வழக்கங்களும் யாவருமறியத் தெள்ளிதின் விளக்கிக்காட்டும் ஒள்ளிய நூலாதலின் ஒரு கருவூல மெனலாம். எந்நாட்டவரும், எச்சமயத்தவரும் எந்நாளும் போற்றிப் புகழும் பெருமையுடையதாய் உலகவரை தன் வயத்தாக்கியமைதலின், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்டதமிழ் நாடு," எனக்கூறுவாராயினர். தமிழரல்லாப்பிறரை வாயார வாழ்த்தித்திருநாள் கொண்டாடும் நம்மவர் வள்ளுவரை நினைந்து வழுத்தாதிருத்தல் நன்றி மறத்தலாம். வள்ளுவரைப்பற்றிச் சில குறுகிய மனமுடையார் கட்டிய பொருந்தாக் கதைகளையும், ஆரியத்தின் வழிநூலெனும் வன்கணர் சிலரின் போலி உரைகளையும், வெறுத்தொதுக்கித் தள்ளல் வேண்டும். இதுபோன்று தொல்காப்பியரைப்பற்றி வழங்கும் கதையும் புறக்கணிக்கத்தக்கது. பொருந்தாப்புனையுரைகளையே சான்றுகக் கொண்டு நல்லதமிழ் இராவணனை ஆரியனெனக் கொள்ளும் பான்மை பொருத்தமன்று. இனி வள்ளுவர் எக்காலத்தவர் என்பதை யாய்ந்து மேற்செல்வாம். சிலர் கி.பி. இரண்டாம் நூற்றுண்டென்றும், ஏழாம் நூற்றுண்டென்றும் அகப்புறச் சான்றேதுமின்றி வழங்கும் கதைகளை யாதாரமாய்க்கொண்டு கூறுவர். அது பொருந்தாதாதலின் அவற்றை விலக்கிக் குறட்பாக்கள் எடுத்தாளப்பட்டுள செய்யுட்களைக் கருவியாகக் கொண்டு அவர் தம் காலத்தை அறிதியிடுவாம். நற்றிணையில்,

"முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சுமுண்பர் நனிநாகரீகர்," எனவந்துளது.

இதன்கண்ணுள்ள பொருளினையும் சொல்லினையும் காணின்,

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரீகம் வேண்டு பவர்,"

என்ற குறளின் கருத்துப் பொதிந்துளது தோன்றும்.

அதே போல், "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"—எனும் குறளின் சீரிய கருத்தே, 'நிலம் புடைபெயர்வ தாயினும் ஒருவன்,
செய்திகொன்றோர்க்கு உய்தி யில்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ," எனப்

புறப்பாட்டில் போந்துளது. இதுபோன்று குறள் சங்கப் பாக்களில் பயின்று வருகின்றமையின் அவற்றினும் முற்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. விழுக்கடிப்பறைந்த........ (புறம். 366) என்ற செய்யுளில் தருமபுத்திரனைக் கோதமனார் பாடியுள்ளார். இப்பெயரமைந்த வொருவர் திருவள்ளுவ மாலையில் காணப்படுகின்றார். புறப்பாட்டு பாடியவரும், வள்ளுவ மாலையில் உள்ள கோதமனாரும் ஒருவரே. ஒருவரல்லரெனின் ஒரே பேரமைந்த இருவரைக் குறிப்பிடும்பொழுது வேறுபாடுணர 'பாலைபாடிய பெருங்கடுங்கோ; தொல்கபிலர்' என அடைகொடுத்து அழைத்தல்போல, இவ்விருவருள் ஒருவர் சிறப்பிக்கப்பட்டிருப்பர். அங்ஙனமின்மையின் அவ்விருவரும் ஒருவரே. ஆதலின், வள்ளுவர் (பாரத) தருமபுத்திரனைப்பாடிய கோதமனார் காலத்திற்கு முற்பட்டவரென்னின் இற்றைக்கு 3500 ஆண்டுகட்கு முன் குறள் தோன்றியெதனக் கொள்ளல் பொருத்தமாகும்.

தமிழ் (திருக்குறள் முதலிய) நீதிநூல்களிற் சிறந்து ஆரியத்தையும் வென்றதெனக் கால்டுவெல் புகன்றார். ஆயின் திரு. சீனுவாச ஐயங்கார் நீதிநூல் எழுந்ததற்குக் காரணம் காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த மக்களை திருத்துதற்கென்றனர். அஃது வரலாறறியா வகைமையேயாம். நீதிநூல்கள் மக்கள் வழக்காறு கொண்டு எழுந்தனவேயல்லால் நீதிநூல்கள் கொண்டு வழக்காறெழுந்தனவல்ல என்பதை அவர்போன்றாரறிய வேண்டும். அன்பர் ஒருவர் தாம் மறத்தமிழ் குடியிற் பிறந்ததை மறந்தவராய் "ஸ்ரீவல்லபர்" என்ற வடமொழியின் திரிபே, திருவள்ளுவர் என, வாய்கூசாது உரைப்பர். அன்னார் நிலைகண்டு இரங்குகின்றேம்.

வள்ளுவர்க்குரைவகுத்தார் பதின்மர், அவர்களுள் மணக்குடவர் ஆசிரியர் கருத்தை உள்ளவாறு தெரித்துளார், பரிமேலழகர் திட்பநுட்பஞ்செறிய, தெளிந்த நடையழகு மிளிர, தொல்

லுரைகளினின்றும் வடித்துச் சிறந்த உரை வகுத்துள்ளார் ஆயினும் பாலிற்பிரையிட்டாற்போல ஆரிய நச்சுக்கொள்கை களை யிடையிடையே வலிந்து புகுத்தி வழி நூலெனக் காட்டுவர். பொதுமறைக்குரை கூறப்புக்க அளவிலேயே குலத்துக்கொரு நீதி கூறும் மனுவை மேல்வரியாக்கி ஒவ்வா உரைப்பாயிரம் தந்துளார் எனக் கூறிப் பரிமேலழகரின் உரை மாறுபாடுகளைத் தெள்ளிதின் விளக்கி, அவ்வவற்றிற்கேற்ற புத்துரையும் தந்தார். நாம் இழந்த பெருமைகளை மீண்டும் அடைய இளைஞர் உலகம் வீறுகொண்டெழவேண்டும், பழம்பனுவல்கட்குத் தமிழ் தழீஇய புத்துரை காணவேண்டும், என வீரஉரை வழங்கினுர்.

பின்னர், வ. துரைசாமி முதலியார் அவர்கள் B. A., L. T., உணர்ச்சி ததும்பக் குறட்பாக்களைப் பொழிந்து மன்றினரை மகிழச் செய்தார்.

அதன்பின் அவைத்தலைவர் விரிவுரைகளிற் கண்ட நயங் களைக் குறிப்பிட்டுப் பாராட்டினுர்.

பின்னர், விழாத்தலைவர் அவர்கட்கும், விரிவுரையாளர் கட்கும், அன்பர்கட்கும், தொண்டர்கட்கும் சங்கம் மனமார்ந்த நன்றியும் வாழ்த்தும் கூற விழா இனிதே நிறைவேறியது.

வாழ்க தமிழ், வாழிய தமிழர்.

தமிழொலி

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்.

(முதல்நாள் விழாவில் பேசியதின் சுருக்கம்.)

பாணினி இயற்றிய சமக்கிருத இலக்கணத்தை ஆய அவர் கூறிய ஒலியியலில் (Phonetics) பெரிதும் ஈடுபட்டு, தம் மொழி கட்கும் ஏற்றவாறு அதனை ஓர் அறிவியலாகவே (Science) பெருக்கினர் மேனுட்டார். இப்பாணினியையும் தென்னுட்டின ராகவே கருத இடமுண்டு. இவர் தாக்ஷி புத்திரன் (தென் மகன்) எனும் அனுரியப்பெயரால் அழைக்கப்படுவதும், வேற்றுமொழியாளரே ஒரு மொழியைக் கற்க இலக்கணங்களை நாடுவது இயற்கையாகவிருப்பதும் இதனை வலியுறுத்துகின்றன. வடமொழியாளர் மிகுதியாக மந்திரம் பயின்றதால் ஒலி யாராய்ச்சி அவர்களுக்கு இன்றியமையாததொன்ருயிற்று. அவ் வாராய்ச்சிசெய்யாத விருத்திராசுரன், இந்திரனுகிய தன் சத்துரு சாக—எனுங்கருத்துடன் "இந்திர சத்துரு அதகா" என்று ஓர் யாகத்தில் சொன்ன பொழுது அசையழுத்தத்தை (accent) முதலெழுத்தில் போட்டு இந்திரனுடைய சத்துருவாகிய

தான் சாக எனும் பொருள்பட உச்சரித்ததால் தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட கதை ஒலியிலக்கணத்தின் சிறப்பை நன்கு விளக்குகின்றது.

இவ்வொலியியலை மேனுட்டார் செயன்முறையில் ஆராய்ந்துள்ள வழிகள் மிகவும் வியக்கத்தக்கனவே. அவர்கள் ஒலி பிறக்கின்ற இடமாகிய குரல்வளை இயங்கும் பொழுது காக்கதிர் (XRay) படங்கள் பிடித்தும், சவர்க்காரக் குமிழிமேல் (Soap-bubble) ஒலித்து அதன்மேலுண்டாகும் அலையியக்கத்தை ஒப்பிட்டும், இசைத் தட்டுகளில் (Gramophone plates) பதியும் ஒலி அலைகளின் வடிவ வேற்றுமைகளை ஆய்ந்தறிந்தும் பல வழிகளில் ஒலிகளின் அடிப்படைகளை விளக்கியிருக்கின்றனர். தொல்காப்பியர் கூறும் ஒலியிலக்கணம் யாவும் மேனுட்டார் முடிபுகளுக்கு ஒத்திருக்கின்றன ; ஆனுல் வீரசோழியம், நன்னூல் மாறுபடுகின்றன. இப்புத்தாராய்ச்சியின்படி (1) க், ட் உயிர்ப்பெழுத்துக்களாகும் (2) மெய்யெழுத்துக்கள் தனித்தியங்க வல்லன (3) மூக்கொலியே மெல்லெழுத்தாகும் (4) வாயொலியே வல்லெழுத்தாகும் (5) உயிரெழுத்துக்களையெல்லாம் மூக்காலும் வாயாலும் ஒலிக்கலாம் (6) வீரசோழிய உரையாசிரியர் 'ட' வை நாக்கை மடித்து (cerebral ஆக) ஒலிக்கச் சொல்லுகிருர் ; ஆனுல் நன்னூலார் அவ்வாறு கூறவில்லை (7) அடிநா அடி அணம் உற 'ய'த் தோன்றும் என்பது நன்னூல், ஆனுல் அது இடைநா இடை அணம் உற'ய'த்தோன்றும் என்றிருக்கவேண்டும்.

தொல்காப்பியத்தில் ஒலியியலைப் பற்றிய பல அடிப்படையான கருத்துகள் விளக்கப்பட்டிருக்கின்றன. வைகரி, பைசந்தி, மத்திமை, சூக்குமை எனும் நால்வகை ஒலிகளுள் யாவராலும் கேட்கப்படும் முதல்வகையே அதில் கூறப்படுகிறது. சிறிதளவே ஒட்டுவதால் உண்டாகும் ஒலிகளை அதில் "வருட" என்று கூறப்படுவது பெரிதும் பொருத்தமுடையதாயிருக்கிறது. அத்தகைய ஒலிகளாய ர, ற வை ஈஷத்ஸ்பிருஷ்டம், Rolling sound Fricatives என்று பிறர் அழைக்கின்றனர். தொல்காப்பியர் காலத்துத் தமிழொலிகளே இப்பொழுது வழங்குகின்றன என மனப்பால் குடிப்பதை ஒழிக்கவேண்டும். அவர்காலத்தில் பட்டணம் எனுஞ் சொல் பத்தணம் எனவும், குற்றியலுகரம் இல்லாமலும் ஒலிக்கப்பட்டன.

ககரம் அப்பொழுது நலிபு எழுத்தாக இருந்ததால் எக்கு, அக்து என்பன எஃகு, அஃது என ஒலிக்கப்பட்டன. அஃது நாளடைவில் ஆய்தமின்றி அது எனப்பட்டது. 8-ஆம் நூற்ருண்டில் பாம்பு எனுஞ் சொல் பாம்ப் எனப்பட்ட தெனக் குமாரில பட்டர் கூறுகின்ருர்.

இலக்கிய ஒலிகள், ஆன்ருேர் பேச்சுக்களன்றி நாடோடிப்

பேச்சும் கீழ் மக்கள் ஒலிகளும் ஆராயப்படவேண்டும். அவ்வாறு ஆய்ந்தே கிரிம்விதி (Grimmin's Law) கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறு நோக்குவோமாயின் பிரஞ்சுக்காரர், மலையாளிகள் மிகுதியாகப் பயன்படுத்தும் மூக்கொலியை நாம் ஏளனம் செய்யினும் நம் வீட்டுப் பேச்சில் காணலாம். வர்ரான், வர்ரேன், வர்ராங்க என்பவற்றிலுள்ள ஈற்றெழுத்துக்களை நாம் மூக்கால்தான் ஒலிக்கிறோம். இவை தன்மை, முன்னிலை, படர்க்கை, பலர்பால் முதலிய இலக்கண வேறுபாட்டைக் காட்டக்கூடிய அத்துணைச் சிறப்புவாய்ந்த ஒலிகளாயிருக்கின்றன.

கல், அகல், அங்கு, அக்கம் என்கிற சொற்களிலுள்ள ககரங்களும், படம், பட்டு, பண்டு என்பதிலுள்ள டகரங்களும் ஒரே ஒலியுடையனவல்ல. ஒரு ஒலிக்கு ஒரே குறி (எழுத்து) முதலில் ஏற்பட்டது. ஆனால் ஒலிகள் பருப்பொருள் (சடம்) அல்ல. அவை மாறுபடினும் எழுத்துக்கள் மாறுபடாமலே இருந்துவிட்டன. கில் என்பதை ஆங்கிலத்தில் kill எனவும் gill எனவும் உச்சரித்தால் பொருள் வேற்றுமை உண்டு. அவ்வாறே பில் என்பதை pill, bill என இரு பொருள்பட உச்சரிக்கலாம். இதனால் க் என்பதற்கு k, g எனவும், பி என்பதற்கு p, b எனவும் இரண்டிரண்டு குறிகள் இருப்பது பொருந்தியதே. ஆனால் தமிழில் கல் என்பதை Kal gal என எவ்வாறுச்சரிப்பினும் ஒரே பொருள் தருகிறதாதலின் க வுக்கு ஒரு எழுத்திருப்பது போதுமானதே. மொழிகளுள் எவ்வளவுக் கெவ்வளவு எழுத்துக்கள் குறைந்திருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நாகரிக முதிர்வைக் காட்டுகின்றன. உள்ளிழுப்பு, வெளிவிடுப்பு, பல்லிஒலிப்பு, மாடுஓட்டு முதலிய ஒலிகளால் பொருள் வேற்றுமையைக் குறிப்பது முன்னேற்றக் குறைவையே குறிக்கின்றன. எனவே ககர, சகர, டகர, தகர, பகரவர்க்கங்கள் தமிழில் இல்லையே யென நாம் வருந்தவேண்டியதொன்றுமில்லை.

நன்கொடைகள், 43 சூன், சூலை.

புலவர் கல்லூரி

திரு.	E. M. கோபாலகிருட்டினக்கோன் அவர்கள் மதுரை (மாணவர் மூவர்க்கு ஓராண்டு உதவித்தொகை)	192-0-0
,,	N. L. வேங்கடசாமிநாயுடு அவர்கள் நெல்மண்டி கரந்தை	35-0-0
,,	N. L. வரதராசலுநாயுடு அவர்கள் மளிகை கரந்தை	30-0-0
,,	V. T. சேதுராமலிங்கக்கவுண்டர் அவர்கள் மிட்டாதார் விட்டம்பாளையம்	25-0-0
,,	S. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் B.A.L.T. வேலூர்	10-0-0
,,	அ. ஜினகுமாரமுதலியார் அவர்கள் மளிகை கரந்தை	1-0-0

எளிய மாணவர்க் குதவி

திரு-	N. P. சுந்தரம்பிள்ளை அவர்கள் B. A. நெல்லை	9-0-0
,,	I. K. துரைராசபிள்ளை அவர்கள் பள்ளியகரம்	5-0-0
,,	A. அப்பாவுத்தேவர் அவர்கள் உக்கடை 20 கல நெல்	

தமிழவேள் நினைவு

திரு.	A. அப்பாவுத்தேவர் அவர்கள் உக்கடை	25-0-0
,,	S. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M.A., B.L., பசுமலை	10-0-0
,,	K. நல்லமுத்துநாட்டார் அவர்கள் கள்ளப்பிரம்பூர்	10-0-0
,,	தி இராதாகிருட்டினநாயுடு அவர்கள் B.A., B.L., தஞ்சை	5-0-0
,,	S. A. சாம்பசிவம்பிள்ளை அவர்கள் கரந்தை	5-0-0
,,	C. வேதாசலம்பிள்ளை அவர்கள் B.A., B.L., மதுரை	5-0-0
,,	T. S. நடராசன் அவர்கள் தில்லை	2-0-0
,,	Dr. K. குப்புசாமிபிள்ளை அவர்கள் கரந்தை	2-0-0
,,	செ. சிங்காரவேல் சேதிராயர் அவர்கள் நன்னிலம்	1-0-0
,,	சிதம்பரசபாபதி அவர்கள் கரந்தை	1-0-0

சிறப்பு நன்கொடை

திரு.	மொ. சா. சண்முகசுந்தரம்பிள்ளை அவர்கள் கரந்தை தமது செல்வி திருமணம்	10-0-0
,,	அ. பொன்னுசாமிபிள்ளை அவர்கள் ஒப்பந்தவேலை கரந்தை செல்வன் திருமணம்	10-0-0
,,	சுப்பிரமணியபிள்ளை அவர்கள் சுங்கந்தவிழ்த்தான் தமது செல்வி திருமணம்	5-0-0
,,	M. இராமு அவர்கள் ஆசிரியர் கூடலூர் தமது திருமணம்	1-0-0
,,	கோ. இரத்தினம்பிள்ளை அவர்கள் ஆசிரியர், சங்கம் திரு. பக்கிரிசாமி நாகம்மை திருமணம்	1-0-0
,,	T. P. வேதாசலம்பிள்ளை அவர்கள் B. A., திருசிரபுரம்	50-0-0

ஆண்டுவிழா நன்கொடை

திரு.	N. A. வர்த்தமானமுதலியார் அவர்கள் மளிகை கரந்தை	15-0-0
,,	வ. மருதப்பாபிள்ளை மளிகை கரந்தை	5-0-0
,	இராமானுசலுநாயுடு அவர்கள் மளிகை கீழவாசல்	5-0-0
,,	N. L. வேங்கடசாமிநாயுடு அவர்கள் நெல்மண்டி கரந்தை	3-0-0
,,	G. இராமசாமிபிள்ளை அவர்கள் மளிகை கரந்தை	2-0-0
,,	N. L. சின்னகிருட்டினநாயுடு அவர்கள் மளிகை கரந்தை	2-0-0
,,	N. L. வரதாராசலுநாயுடு அவர்கள் மளிகை கரந்தை	2-0-0
,	வீ. சு. பெரியநாயகத்தம்மையார் அவர்கள் கரந்தை	1-0-0
,,	தங்கமணியம்மையார் அவர்கள் நெம்மார	1-0-0
,,	ந. மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள் தஞ்சை	0-1-0

வள்ளுவர் குறளும் தமிழ் நூல் மரபும்.

பேராசிரியர் திரு. S. சோமசுந்தரபாரதியாரவர்கள் M.A., B.L., பசுமலை.

(முற்றொடர்ச்சி: துணர் 1க, மலர் 4, பக்கம் 71)

பகுதி (ii)

குறள் தமிழ் முதனூலா? தருமசாத்திர சாரத்திரட்டா?

அன்றியும், குறள் ஆரியர் நாற்பால் கூறுமை மட்டு மன்று; முப்பால் கூட மொழிந்திலதென்று பரிமேலழகர் உடன் படுகின்றார். "அர்த்தம்" அதாவது பொருளைக் கூறுமல் குறள் அரசநீதியே உரைப்பதாயும், அரசநீதி பொருளுக்குத் துணைக் காரணமென்றும், அதுகூறப்பொருளடங்கும் என்றும் கூறினர். முப்பால் வகுக்க முயன்ற வள்ளுவர், பொருளைத் தெருள வுரையாமல், அதன் முதற்காரணத்தையு முற்றிலுமறந்து, துணைக்காரண மொன்றே சொல்லிவிடுவானேன்? பொய்யா விளக்காம் பொருளை விளக்க இயலாதியம்ப முயன்றிலார். அன்றிப் பொருளைப் பொருட்படுத்தாமல் அரசநீதி விரிப்பதே அவர் கருத்தாயின், "ராசநீதிசாரம்" என்று பொருந்தப் பெய ரிட்டிருக்குமே. இயற்றியோ ரெண்ண மெதுவே யாயினும், பொருளே கூருக்குறளறநூலை முப்பாலென்பது தப்பேயாகும். அரசநீதியும் காமமுமுரைக்கும்"இருபா"லென்றேனும், வருணச் சிரம—நீதிச்சார—காமரசதருமங்களை வடித்துக்கூறும் "ஒரு பால்" என்றேனும் கூறுதலன்றோ முறையாகும். அதைவிட்டு, "தருமமுதன் நான்கும்" "முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்" என்று தப்பைக் கூறித்தடுமாறுவதேன்? உண்மையாதெனின், வள்ளுவர் நல்ல தமிழர். தமிழ்நூல் மரபிற் புலநெறி வழக் கினலம் நன்கறிந்தவர். அதனால் வடநூல் வழியில் அறமுதல் நாற்பால் வகுத்து நூலியற்றுங் கருத்தவற்கில்லை. அகமும் புறமுமாயிருவகைப்படுபொருளை விரித்துத் தமிழ்நூல் செய் தார். அதன் தனிப்பெருமை யறிந்து அதைப் பின்னோர் நாற்பாற் பொருளும் வடநூல் முறையில் வகுக்கும் வழிநூலாக்க முயன் றோர் தங்கள் வழிக்கமையாத் தடைகளை விலக்க இல்லவும் பொல்லவும் பல்லாருக விரித்தும் விலக்கியும் திரித்தும் உரைத் தார்.

7. இனி, முப்பாலாக வள்ளுவர் வகுத்தால், பொருளும் காமமும் பெரிதுடைநூலை, அவை குறியாமல் அறநூலென்பது

தவருமன்றோ? ஆகவே, வள்ளுவர் வாய்மொழி ஆரிய தரும சாத்திரமன்று, தமிழர் பொருணூல் என்பதே பொருந்தும்.

8. வள்ளுவர் குறளின் தனிமுதற் பெருமையை மறுப்பவ ரெவரும், அது வடநூலொன்றன் மொழிபெயர்ப்பென்றோ, இன்னநூலின் வழிவருமென்றோ கூறுகின்றிலர், பொருட் டொகையாலும், முறைவகையாலும் வடமொழிப்பரப்பில் குறள் போலொரு நூல் கூறுதற்கில்லை. பொருளிலும், வகையிலும், போக்கிலும், நோக்கிலும் ஒப்புக்கூறுதற்குரிய நூலொன்றும் இல்லாநிலையில், குறளை வழிநூலென்பவர் துணிவா? அதை யப்படியே சொல்லித்திரியும் புலவரின் அறிவா? பெரிதெனை வியப்பரிதாகின்றது. திருக்குறளில் ஒருநூற்று முப்பத்து மூன்றியல்கள் உள்ளன. ஓரியற் பத்துக்குறள்களையேனும் ஒத்தொரு வடநூல் உரைக்கக்காணோம். ஓரொரு குறட்கருத் தொத்து வருதொடரை ஒவ்வொரு நூலிடைக் கிளைத்துப் பொறுக்கி விழுக்குறள் மணிகளுக்கது முழுமுதல் விதையென சழக்குரைகூறி வழக்கும் தொடுப்பார். வியக்கும் காவியம் பயக்கும் கருத்தை முற்றிலுமொத்த சொற்றொடரமைந்து மேல் புலக்கவிகளில் மிளிரக் காண்குவம். அதனாலவற்றுள் ஒன்று மற்றதன் விதை முதலென்பது நகைக்கிடமன்றோ? குறட்கருத் தொத்துள வடமொழிக்கவிகள் குறளெழுமுன்னே வழங்கிய துண்டோ? முந்தியவெனினும், வள்ளுவர் அவற்றைக்கண்டு தந்நூலிற் கொண்டாரென்னக் காட்டும் சான்றுகள் கேட்டது முண்டோ? இடமும் காலமும் தொடர்பிலாப் புலவர் ஒத்த கருத்தைப் பல்வேறு மொழிகளில் உரைத்தோரிலரோ? அன்றி யும், ஒழுக்கறமெல்லாம் என்றும் யாண்டும் ஒத்திருப்பதுவே உலகியலன்றோ? ஓரளவொப்பவை ஒரு சிலவன்றி குறளற மனைத்தும் பிறமொழி நூல்கள் கூறக்கேட்பினும், அதனாலவை கள் ஒருமத வகுப்பார் பொது வழக்குரைப்பவை என்பது சாலாது. அறநெறி மக்களனைவரிடத்தும் ஒத்தமைந்திருப்பது உறவுசுட்டாது. அதற்கெதிராக, வாழ்வற மரபுகள் மாறுபடு நூல்கள், வேறின வகுப்பார் வழக்குரைப்பனவாய்க் கொள்வ தே முறையாம். அகப்புறவாழ்க்கையில், மக்கள் மனையறம், தொழிற்றுறை, உரிமை, கடமைகள், வழக்கொடு கொள்கை வகை களில் குறளும் தருமசாத்திரங்களும் கூறுமரபியல் நெறிகளை நிரலே ஒப்ப நோக்கி உண்மை காணுவம். ஆனால், உரைகள் புகுத்தும் புதுமைகளொழித்து, "வள்ளுவர் சொல்" லால் வருபொருள் மட்டே குறட் கருத்தாகக் கொள்ளல் வேண்டும்.

முதலில், தமிழறமும், ஆரியதருமமும் ஒருபொருள் குறிக் கும் இருசொல்லன்றென அறிதல் வேண்டும். (i) தருமம்

என்பது, ஆரியர் நூல்கள் கூறிய நெறியியல் குறிக்கும் சொல்லாம். அதனால், ஆரியதருமம், என்றும் யாவருக்கும் ஒத்தியலாமல் பிறப்பு, நிலை, பதவி, உத்தியோகம், அவசியம், ஆபத்து, இடம், காலம், இவைகளுக்கேற்ப வேறுபடும். தமிழறம், எல்லார்க்கும் எஞ்ஞான்றும் மாறுதமையும் இயல்முறைசுட்டும். அறத்தை நூல்கள் ஆக்குவதில்லை; ஆராய்ந்துரைப்பதே நூலோர் மேற்கோள். (ii) நூல்கள் விதிப்பதே தருமமாகையால், அது நூலோர் மதப்படி வெவ்வேறுகும். ஆதலால் குறைந்தது மநுதருமமுதல் பராசரர் தருமம் வரை பதினெண்வகையில் ஒரு வகுப்பார்க்கே தருமம் பலதிறப்படும். நூலோர் ஒப்பினும் ஒவ்வாவிடினும், அறத்துறை அனைத்தும் மாறுவியல். (iii) இன்னும், தருமம், செய்யவும் தவிரவும் நூல்விதிக்கும் ஆணைகளாகும்; அதனுலவைகள் அரசியலாரால் ஒறுப்பொடு வற்புறுத்தப்பெறும். "அறம் வழக்கும் தண்டமுமான அரசநீதியின் வேறுபட்ட பொது இயல் குறிக்கும். அறம் திறம்பல் பழிக்கன்றி தண்டத்துக்காளாக்காது.........எனவே, வள்ளுவர் குறளும், வடநூல் தருமமா மாறில்லை.

9. இனி, பிறப்பாலுயர்வும் பீடிலாத் தாழ்வும் மக்களுக்கென்றும் மாறுநிலையில் சாதிகள் விதிக்கும் தருமசாத்திரம், "சாதி" என்னும் சொல்லும் கருத்தும் ஆரியர் மொழியும் மரபும் படைத்த அரும் பயிர் விளைவே. அதை அறவே மறுத்துப் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று முழங்கும் வள்ளுவர் தமிழ்க்குறள் பிறப்பாலுரிமையும், சாதி நீதியும் பேசாததுமட்டுமல்ல; "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்று தமிழர் கொள்கையையும் வரையறுக்கிறது. இருபிறப்பாளர் மூவகை மக்களும் ஒரு பிறப்புடைய இருகாற் பொதிவிலங்கொருவகை மாக்களும் தரும நூல் விதிக்கும் மாந்தர் வகைமுறை. இவ்வருண தருமம் குறளறமறியாக் கொள்கையாகும். நிற்க,

10. மேலோர் மூவர்க்கும் நால்வேறு நிலையில் வாழ்க்கையுரிமை வகுத்துக்கொடுக்கும் ஆரிய தருமம், இதை ஆச்சிரம தருமம் என்னும் வடநூல். ஆச்சிரம உரிமை சூத்திரர்க்கில்லை. அதனுல், கல்வி, இல்லறவின்பம், புலமைச்சிந்தனை, விடுதலை வாழ்வு என்னும் நானிலையுரிமையும் நுகர்வும், பெரும் பாலோர்க்கு விரும்பினும் பிழையாம். வீட்டை விரும்பித்தவ மேற்கொண்ட சூத்திரன் பிழைக்கு, அவனை, தளர்ந்ததருமத்தை வளர்க்கவந்த கடவுள் இராமனே கொன்று நிறுத்திய கதையால் ஆச்சிரம தருமத்தின் இயல்பும் வலியும் இனிது விளங்கும். கல்வி, மனைமாட்சி, தவம், துறவு என்னும் நானிலை வாழ்வும் எல்லா மாந்தர்க்கும் ஒத்துரிமை யாக்கும் குறளறம். எனவே,

நிறமொத்த வெண்ணெயும் சுதையும் வேறுவதுபோல குறள் அறமும் ஆரிய தருமமும் இயல் மாறுபடும்,

11. தருமசாத்திரப்படி ஓதல், மேலோர் சிறப்புரிமையாகும். பெரும்பாலோர்க்கது விலக்கப்பட்டது. எல்லார்க்கும் கல்வியை இன்றியமையாத பொது உடைமையாக்கும், குறள் கூறும் தமிழறம்.

12. இருபிறப்பாளரல்லாரெல்லார்க்கும் பொருளுரிமை மறுக்கும் தருமநூலனைத்தும்; இன்பமும் அறனும் எல்லாமீயும் பொருளாக்கம், மக்களுக்கெல்லாம் பொதுவுரிமையென்னும் குறள்.

13. பிறப்பால் குலமுறை பேணி, அதன் வழியிணைவும் மணமும் உறமும் விதிக்கும் தருமநூல்; சிறப்பால் குடிசெய்து வாழும் பெருமை எல்லார்க்குமியல்பென்னும் குறளறம்.

14. தொழில்களை மாந்தர்க்கு வருணமுறையால் வகுத்து விதிக்கும் தருமநூல்; செய்திறனும் வாய்ப்பும் உளதாயின், எவ்வினையும் எல்லார்க்கும் நன்றென்னும் குறள். பொருள், கருவி. காலம், இடம், திறனெனடைந்தும் எண்ணி விரும்புவினைமேற்கொள்ளும் நெறி குறிப்பதல்லால், பிறப்பும் பிறவும் எத்தொழிற்கும் விலக்கென மறுப்பதைக் குறள் கொள்ளாது.

15. உழவை இழிவாக்கி, ஆரியர்க்குப் பழியாய் விலக்கி, கீழோர்க்கும் விதிக்கும் தருமநூல்; தொழிற்கெல்லாம் "உழவே தலை" என்றும், கோவேந்தர் கொற்றக்குடையும் தங்குடைக் கீழ் காண்பவராய உழவர் அரசரினுமுயர்வுடைய பெரியாரென்றும், கோழைபடா மேழிச்செல்வம் எல்லார்க்கும் நல்லதெனவும் பாராட்டும் குறள்.

16. மேலோர் மூவருள் முதல்வரான வேதியர்க்கு இரத்தலை உரித்தாக்கி, உழையா உஞற்றுஉயர் தொழிலாக்கும் தருமநூல். தமக்கன்றி "ஆவிற்கு நீரென்றிரப்பினும் (மக்கள்) நாவிற்கிரவின் இளிவந்ததில்" என்றெல்லார்க்கும் இரவிழிவாவதைக் குறள் கூறும். மேலும் "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்," அச்சிறுமையுடைய "உலகியற்றியான் (படைத்த கடவுள்) பரந்து கெடுக" என்றிரப்பிற்றமிழர் வெறுப்பை விளக்கும்.

17. உயிரும் மானமும் உடனேம்ப இடனில்லாக்காலை,

மானத்தை விட்டுத் தம் முயிர்பேண விதிக்கும் தருமசாத்திரங்கள். "உயிர் நீப்பர், மானம் கெடவரின்" என்று இளிவரின் வாழாத தமிழரியல்புரைக்கும் குறள்.

18. சூதினை ஆட்சியுரிமை மாட்சியுடைய இரண்டாம் வகுப்பார்க்கு மறுக்கொணுத்தரும மென்றும், மற்றவர்க்குப் பொருட்கேடல்லால் பழிபயக்கும் இழிவன்றென்றும் விதிக்கும் தருமநூல். செல்வமொடு பண்பும் கெடுத்து, அல்லலுழப்பிக்கும் சூதை, எல்லார்க்கும் நல்வாழ்வின் வழியடைக்கும் தீதென்றதன் இழிதகவை வலியுறுத்தும் குறள்.

19. மெலியாரை நலிந்தவர் உரிமை பறிப்பது அரசர் சால்பென்று பாராட்டும் தருமசாத்திரம். "இகல் மேவும் இன்னு அறிவு," "எவ்வுயிர்க்கும் பகலென்னும் பண்பின்மை பாரிக்கும் நோய்" என்னும் குறள். இவ்வேறுபாடுகள் ஆழாது மேலளக்கும் அனைவருக்கும் புலனுகும். இன்னும் பல ஆழ்ந்து துருவி ஆராய்வார் சொல்லக்கூடும், ஆனுலும் தமிழ்க்குறள், ஆரியர் சாத்திர வழிநூலாகாமை காட்டுதற்கிவைசாலும். வடநூல் வழக்குகட் கெதிராகத் துறைதொறும் வேரும் தமிழ்மரபு தெளிக்கும் வள்ளுவர் நூல் தனி முதலாவதை மறுப்பாரறிவை என்னென்பது? "ஆரியர்க்குரிய வேதவேள்வியை நிந்தனை செய்யும்" சமணூல் போலாது, தமிழ்க்குறள் ஆளாது வாளா அகலவிடும் பெற்றிமை அறிந்து பாராட்டத்தக்கது. வள்ளுவர் பிறர் பழியும் தம்பழிபோல் நாணும் தமிழ்ச் சான்ருேராதலின், தமிழர் விரும்பா ஆரியவழக்குகளைப் பழியா தொழிப்பர், புகழவுமாட்டார். சாற்றிற்றம்மாற்றலழிந்தொழியும் நான்மறையை, "அந்தணர் நூல்" என்றகற்றிப் பேசும் வள்ளுவர் "ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணுமை நன்று" என்று வேள்வியை விலக்கும் தமிழ்மரபுரைப்பர். வெட்டென விளங்குமிவ்வுண்மை உணராமல் முட்டிமடியுமறிவின் முடவர், வைதிகதருமமும், பொதுமறையறமும் ஒன்றென நினைப்பர். தனித்தமிழ்மரபை நுனித்தறிந்துரைக்கும் முழுமுதற்றமிழ்நூல் வள்ளுவர் குறளெனக் கொள்ளுவர் வாய்மைவகையுணர் சான்ருேர். வாழ்க தமிழ்க்குறள், வாழிய மாந்தர்!

ஆறு பிரத்தியயங்களின் விளக்கம்.

திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்.

(முற்றொடர்ச்சி : துணர் ௰௧, மலர் 4, பக்கம் 82)

இங்கு, 'மத்யா' என்னுஞ் சந்தஸைப் பிரஸ்தாரஞ் செய்வோம் : 'மத்யா' சந்தஸ் ஓர் அடிக்கு மூன்று எழுத்துக் களையுடையதாகலின், முதல்வரியில் மூன்றெழுத்துக்களையும் 'குரு' ஆக எழுதுதல் வேண்டும்.

1	—	—	—	மூன்றெழுத்துங் குரு ஆக எழுதப் பட்டன.
2	ப	—	—	மேல்வரியிலுள்ள முதற்குருவிற்கு நேராக லகுவும் மற்றையவை மேல்வரியிலுள்ள எழுத்துக் களும் எழுதப்பட்டன.
3	—	ப	—	மேல்வரியிலுள்ள முதற்குருவிற்கு நேராக லகுவும் அதன் வலப் பக்கத்தில் மேல்வரியிலிருந்த வாறே குருவும் எழுதப்பட்டன; இடப்பக்கத்தில் 'குரு' எழுதப் பட்டது.
4	ப	ப	—	மேலவரியிலுள்ள முதற்குருவிற்கு நேரே லகுவும் மற்றையவை மேல் வரியிலுள்ளவாறே லகு வும் குருவும் எழுதப்பட்டன.
5	—	—	ப	மேல்வரியிலுள்ள குருவிற்கு நேரே லகுவும் அதன் இடப்பக்கத்தில் குருக்களும் எழுதப்பட்டன.
6	ப	—	ப	மேல்வரியிலுள்ள முதற்குருவிற்கு நேரே லகுவும் மற்றையவை மேல்வரியிலுள்ளவாறே குரு லகுவும் எழுதப்பட்டன.
7	—	ப	ப	மேல்வரியிலுள்ள குருவிற்கு நேரே லகுவும் அதன் வலப்பக்கத்தில் மேல்வரியி லிருப்பது போன்று

				லகுவும் எழுதப்பட்டன ; இடப் பக்கத்தில் குரு எழுதப்பட்டது.
8	ய	ய	ய	மேல்வரியிலுள்ள குருவிற்கு நேரே லகுவும் மற்றையவை மேல்வரியி லிருப்பனவாகவும் எழுதப்பட் டன.

எல்லாவெழுத்துக்களும் லகுக்களா யமைந்ததனால் இதனோடு நிறுத்திவிடவேண்டும்.

இக்காட்டியவற்றான் 'மத்யா' என்னுஞ் சந்தஸ் எட்டு வகை ஆகும் என்பதுவும் ஒவ்வொரு விருத்தமும் இன்னவாறு இருக்கும் என்பதுவும் அறியலாகும்.

இனி, ஓர் அடியில் நான்கெழுத்துக்களையுடைய 'பிரதிஷ்டா' என்னுஞ் சந்தஸைப் பிரஸ்தாரஞ் செய்வோம் :

1	—	—	—	—
2	ய	—	—	—
3	—	ய	—	—
4	ய	ய	—	—
5	—	—	ய	—
6	ய	—	ய	—
7	—	ய	ய	—
8	ய	ய	ய	—
9	—	—	—	ய
10	ய	—	—	ய
11	—	ய	—	ய
12	ய	ய	—	ய
13	—	—	ய	ய
14	ய	—	ய	ய
15	—	ய	ய	ய
16	ய	ய	ய	ய

இவ்வாறே எந்தச் சந்தஸையும் பிரஸ்தாரஞ் செய்யலாம்.

2 நஷ்டம் (கேடு)

இனி, எந்தச் சந்தஸையும் பிரஸ்தாரஞ் செய்யாமலே இத்தனையாவது விருத்தம் இவ்வாறிருக்கும் என்று அறிதற்கு

வழி உளது, அதனை ‘ நஷ்டம் ’ என்று சொல்லுவர். நஷ்டம் என்பது எந்த விருத்தத்தை அறிய விரும்புகின்ருேமோ அதனைக்குறிக்கும். எந்த விருத்தத்தை அறிய வினவுகின்ருேமோ அந்த விருத்தத்தின் இலக்கம் (எண்) ‘ நஷ்ட அங்கம் ’ எனப்படும். உதாரணமாக, ‘ மத்யா ’ சந்தஸில் ஆரும் விருத்தம் எவ்வாறிருக்கும் என்று வினவின், அந்த ‘ ஆறு ’ என்னும் எண் நஷ்டாங்கம் ஆகும். அவ்வாறே ‘ ப்ரதிஷ்டா ’ சந்தஸில் பதிஞென்ரும் விருத்தம் எவ்வாறிருக்கும் என்று வினவின் பதிஞென்று என்னும் எண் நஷ்டாங்கம் ஆகும்.

நஷ்டாங்கம் இரட்டைப்பட்ட எண்ணுயிருப்பின் அவ் விருத்தத்தின் முதலெழுத்து லகுவா யிருக்கும்; ஒற்றையெண்ணு யிருப்பின் முதலெழுத்துக் குறிலா யிருக்கும். இரண்டா மெழுத்தினை அறியவேண்டுமாயின் நஷ்டாங்கத்தைப் பாதியாக்க வேண்டும். அப்பொழுதும் இரட்டையெண்ணுயிருப்பின் அவ் வெழுத்து லகுவே; ஒற்றையெண்ணுயிருப்பின் குரு. இவ்வாறே அத் தொகையைப் பாதியாக்கி இரட்டையெண்ணுயின் லகுவும் ஒற்றையெண்ணுயின் குருவும் எழுதவேண்டும். அந்தச் சந்த ஸின் எழுத்து முடியும்வரை இம்முறைப்படி லகு குருக்களை எழுதவேண்டும். ஆயின், நஷ்டாங்கமோ, பின்னர்வருந் தொகை யோ, ஒற்றையெண்ணுயிருப்பின் அதனேடு ஒன்று சேர்த்துக் கூட்டி, அதில் பாதியை எடுக்க வேண்டும்.

ஈண்டு இம்முறைப்படி ஒரு விருத்தத்தை அறிவோம் :

மேற்குறித்தபடி ‘மத்யா’ சந்தஸில் ஆருமெழுத்து எவ்வா றிருக்கும் என்பதுவே விஞவாகக் கொள்வோம். இங்கு, ஆறு என்பது நஷ்டாங்கம். அஃது இரட்டைப்பட்ட எண்ணுயிருத் தலின் அவ்விருத்தத்தின் முதலெழுத்து லகு ஆகும். இனி, ஆறில் பாதி மூன்று. அஃது ஒற்றைப்பட்ட எண்ணுதலின் இரண்டாமெழுத்துக் குரு. மூன்றில் பாதி முழுஎண் ஆகா தாதலின், அம் மூன்றனேடு ஒன்றனைக் கூட்டிக் கொள்ள வேண்டும். மூன்றும் ஒன்றும் நான்கு. நான்கிற் பாதி இரண்டு. அஃது இரட்டையெண்ணுதலின் லகு ஆகும். மத்யா சந்தஸ் மூன்றெழுத்துக்களையே உடையதாகலின் இதனேடு நிறுத்திக் கொள்ளவேண்டும். ஆக, மத்யா சந்தஸின் ஆரும் விருத்தம் லகு குரு லகு ப — ப என்னும் எழுத்துக்களை யுடையதென்பது அறியப்பட்டது. மேலே, பிரஸ்தாரஞ் செய்தவிடத்து வந்ததனை நோக்குக.

(தொடரும்)

" ந "

திரு. C. நடராசா அவர்கள், விரிவுரையாளர், ஆசிரியர் கல்லூரி,
மட்டுநகர், இலங்கை.

நமது நாட்டில் தங்கோணிறுத்தல் பொலிந்து மலிந்து விளங்கும் எந்நூலேயும், நன்னூலெனக் கருத்திற்கொள்ள விடாது தொன்னூல்களோடு பன்னூல் கொண்டு நுண்ணிதின் நுழைந்து நூன்முறை பார்த்து, வழக்கினிலக்கணம் இழுக்கின் றறிந்து தொல்லாசிரியர் வழக்கால் இழுக்காமென உலகிற்கு அறிவுறுத்தல் கற்றறிந்தமைந்த சான்ருேர் கடமை. முதுக் குறைவினர் தம் முதுக்குறைவின் காரணமாகவோ அன்றேல் தம் செல்வாக்குடைமையினுலோ ஒன்றனை வலிதில் நிலைநாட்ட முன்வருவாரேயாகில் உலகென்னும். இன்னேரன்னவரை எள்ளி நகையாடல் கற்பவை கசடறக்கற்ற பெரியார் கொள்கையா யிருத்தல் வேண்டும்.

" அதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பர் "

" நூலுரை போதகா சிரியர் மூவரும்
முக்குண வசத்தான் முறைமறந் தறைவரே
யிம்முறை யெல்லா மெவர் பகுத் தறியினு
மவத்தை வசத்தா லலேகுவர் திடனே "

என்ற இலக்கணக்கொத்துரைகாரர் கூற்றிற்கு அவ்வுரைகார ரே இலக்காயினுரெனின், இவ்விதிவிலக்குக்கு எடுத்துக்காட்டு அரிதன்று. யானையும் அறுகம் புல்லிற்றடுக்குமென்பது மூதுரை யன்ருே! இஃதிவ்வாறே சங்கதம், தமிழெனு மிருமொழியிலும் பயின்றுவரும் " ந " என்ற எழுத்து பல நூலுரை போத காசிரியர்கட்கு இடறலாயிருந்திருப்பதை ஆராய்ச்சியான் உலகிற்கு அறிவித்து என் சிற்றறிவைப் பெருக்கிக் கொள்வான் வேண்டித் தமிழ்ப் பொழில் மூலம் வெளியிட முயன்று கொண் டேன். அன்பர்கள் தம் கருத்தை வெளியிடுமாறு வேண்டு கின்றேன்.

"ந" என்பது எழுத்தென்றும். தமிழில் "ன" என்ற சிறப்பெழுத்தொன்றிருந்தும் இவ்விரு எழுத்தையும் மாறு கொளவைத்தல் தமிழன்பர் மறக்கவேண்டியதொன்று. சிறப்பெழுத்தான னகரம் மொழிக்கு முதலில் வருவதில்லை. நகரம் முதலில் வரும். இடையிலும் கடையிலும் னகரம் வரும். நகரமும் இடையில் வடமொழியில் அதிகமாக வருகின்றது. வடமொழி தமிழில் வரும்போது நகரம் அன்றேல் னகரம் எது இருக்கற்பாலது? கடையில் நகரம் வரமுடியுமா? இவை ஆராய்ச்சிக் குரியவை. சில சொற்களைத் தெரிந்து தெரித்து ஆராய்ச்சிக்கு விடுகின்றேன். இரு மொழிப் புலவர்களும் சேர்ந்து உலகிற்கு முடிவினை அறிவிப்பார்களாக.

சினேகம்	...	சிநேகம்
ஆனந்தம்	...	ஆநந்தம்
விநோதம்	...	விநோதம்
அனேகம்	...	அநேகம்
அனுமதி	...	அநுமதி
சன்னியாசம்	...	சந்நியாசம்
ஆகுனவும்	...	ஆகுநவும்—தொல்-சொல். 449
வருனவும்	...	வருநவும்—தொல்-சொல். 250
கேட்குன	...	கேட்குந—நன்னூல்-409.
சீமான்	...	சீமாந்
துள்ளுனர்	...	துள்ளுநர்—கலி-4.
துணையுனர்	...	துணையுநர்—கலி-145.
மயங்குன	...	மயங்குந—இல. விளக்கம்-344.
வல்லுனர்	...	வல்லுநர்—திருவாசக விரிவுரை பக். 349.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளுட் சில தொல்காப்பியம் முதலாம் பண்டை நூல்களிற் காணப்படுவன. இவை சந்தம் நோக்கி மாற்றப்பட்டவையே. அன்றேல் நகரம் என்றோர் சாரியை உண்டென்றே சொல்வதற்கியலாதிருக்கின்றது.

இந்த "ந" எழுத்தொடு மாத்திரம் நில்லாது சொல்லாக வும் அமைந்து நடக்கின்றதாம். சொல்லாக நிற்கும்போது தமிழில் இடைச்சொல் எனவும் சங்கதத்தில் உபசருக்கம் எனவும் உரைக்கப்படுவதுண்டு. பிரயோகவிவேகம் என்னும் நூலினைச்

செய்தார் 'இன்மை, அன்மை எதிர்மறை மூன்றிலும் நஞ்ஞு வரும்' என்பர். "ந" சிறப்புப் பொருள் உணர்த்துவதோர் இடைச்சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற் போல்' என்பர் நச்சினார்க்கினியர். (சீவகசிந்தாமணி 482). இதனைத் தமிழகராதிகள் செய்தோர் ஒருசிலர் வாளாதே உபசருக்கம் என்ன, மற்றையோர் வடமொழி உபசருக்கம் என்பர். நன்னூலுக் குரைகண்ட மயிலைநாதரும் "தெரிநிலை தேற்றம்" என்ற தொடக்கத்து நூற்பா உரையில் இதனைக் காட்டியுள்ளார். கலித்தொகையைப் பதிப்பித்த அனந்தராமையர் அந்நூலைத் தொகுத்தாரை மேல்விதிப்படி நவ்வந்துவனார் என்பர். நக்கீரனாரின் கதை விநோதமாயிருக்கின்றது. அவர் ஒருகாலத்தில் நற்கீரரெனவும் பின் இவ்விதிக்கியைய நக்கீரரெனவும் கூறப் பட்டாரென அனந்தராமையர் கூறுகின்றார். இராமச்சந்திர தீட்சதர் தமது ஆங்கில நூலில் (Studies in Tamil Literature and History) கீரர் என்பதோர் சங்கத மொழி; வாக்கு அன்றேல் கலைத்தெய்வம் என்பது பொருள்; தலைமைப்புலமை நோக்கிப் போலும் கீரன் எனப்பெற்றார் எனவும், நக்கீரர் என்றால் பெரிய கீரர் என்றும், நற்கீரர் ஆயின் நல்ல கீரர் என்றும் எழுதி யுள்ளார்.

இனி, பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்க வெளி யீடு—சங்க மருவிய எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவதாகிய கலித்தொகையில் கலித்தொகை மாட்சியைப்பற்றி எழுதிய தமிழ்மலை இளவழகன் இன்னோர் புதிய முறையில் மேற் போந்த பெயர்முறைகளை விளக்குகின்றார். இயற்பெயர்களின் முன் அக்கால வழக்கப்படி "நல்" என்னும் நன்மைப்பட்டமுஞ் சேர்த்து கலித்தொகை தொகுத்தவராகிய அந்துவனாரை நல் லந்துவனார் எனச் சிறப்பாய் வழங்கிவந்தார்கள். இயற்பெயரின் முதலெழுத்து உயிராகவேனும் அல்லது அதனியல்போடிசைந்த மெல்லின இடையின வெழுத்தாகவேனு மிருந்தால் "நல்" எனவும், அங்ஙனமன்றி அம்முதலெழுத்து வல்லினமாயிருந்தால் லகர வொற்றுகெட்டு "ந" எனவும் இயைந்து வழங்குவது மரபாயிருந்தது. சோழன் நல்லுருத்திரன், நல்லெழினியார், நல்லிறையனார், நல்லழிசியார், நல்லச்சுதனார், நன்னாகனார், நல் வழுதியார் எனவும், நக்கீரனார், நச்செள்ளையார், நத்தத்தனார், நப் பண்ணனார் எனவும் வரும்பழம் பெயர்களால் இவ்வழக்குண்மை தெரிந்துகொள்ளப்படும் என எடுத்துக்காட்டியுள்ளார். இக் கூற்றினையும் முற்றமுடிய ஒத்துக்கொள்ளத் தக்கதென்று சொல்வதற்கும் ஒருப்படவில்லை யென்பதைத் தெரிவித்துப் பின்வரும் வரிசைப்படி விளக்குதும்.

"நல்" உயிர், மெல், இடைமுன்	"நல்" வல்முன்	"நல்" வல்முன் விதிக்கொவ்வாதவை
நல்லுருத்திரன்—உயிர்	நக்கீரனார்	நற்சேந்தனார்
நன்னாகனார்—மெல்	நப்பசலையார்	நற்றத்தனார்
நல்வெள்ளியார்—இடை	நத்தத்தனார்	நன்கணியார்

இவ்வரிசைமூலம் இளவழகனார்கூற்று நற்சேந்தன் முதலிய பெயர்களில் அனுகூலம் பெற்றிலதென்பதை உய்த்துணரக் கூடியதாயிருக்கின்றது.

மேலும் மேலும் துருவியாராயுமிடத்து "ந" என்பதை ஓர் இடைச்சொல்லாகத் தமிழ் இலக்கணம் எங்கணும் கண்டிலோம். உண்மையில் தமிழில் இஃதொரு இடைச்சொல்லாயின் இலக்கணவாசிரியர்களால் சொல்லாமலிருப்பதற்கு நியதியில்லை. எனவே, இதுவோர் தமிழ் இடைச்சொல் எனக்கூறல் பொருந்தாது. நன்னூலில் மட்டும் உரையிற் கண்டுள்ளேன்.

வடமொழி உபசருக்கமாகவும் சிலவிடங்களிற் கூறப்பட்டிருக்கின்றதே, அதனையும் ஏன் ஆராயாமல் விடவேண்டும்? மேற்செல்வோமாக. வடமொழி உபசருக்கங்கள் எல்லாமாக இருபதென்பர் பிரயோக விவேகம் செய்தார். (பிரயோக விவேகம்—பக்கம் 83) அவ்விருபதனையும் அவற்றின் சில பொருள்களையும் சில எடுத்துக்காட்டுகளையும் பார்ப்போமாக. (விரிவு: செந்தமிழ்-தொகுதி உ, பகுதி ௬)

i பிர—மிகுதி, எதிர், பிரதானம்—பிரபலம்
ii பரா—பின், எதிர், அதிகம்—பராமுகம், பராக்கு
iii அப—எதிர், அப்பால், பிரிவு—அபகாரம்
iv சம்—சுகம், நன்மை, அழகு—சம்போகம், சம்பூரணம்
v அநு—பின்கூட்ட, வரிசை—அநுமானம்
vi அவ—கீழ், கேடு—அவமானம்
vii நிர்—நிச்சயம், விலக்கு—நிர்மலம், நிர்ணயம்
viii துர்—நிந்தை, துக்கம்—துர்க்குணம்
ix வி—விலக்கு, அற்பம்—விமலன்
x ஆ—அற்பம், எதிர், நிறை—ஆகமனம்

(தொடரும்)